VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
உடன் இணைந்து

இந்து தமிழ் திசை

தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
வழங்கும்



# நாளைய விஞ்ஞானி

## THE FUTURE SCIENTIST

**உங்களுக்குள்ளிருக்கும் அறிவியல் அறிஞரைக் கண்டெடுக்கும் முயற்சி இது**

**நீங்களும் பங்கேற்க...**

9, 10, 11, 12-ஆம் வகுப்பு மாணவ - மாணவிகள் பங்கேற்கலாம்.

---

9, 10 ஆம் வகுப்பு மாணவ - மாணவிகள் ஒரு குழுவாகவும், 11, 12 - ஆம் வகுப்பு மாணவ - மாணவிகள் ஒரு குழுவாகவும் இருக்க வேண்டும்.

---

இன்றைய கால சூழலுக்கு தேவையான புதிய அறிவியல் கண்டுபிடிப்பினை நீங்களும் கண்டறியலாம்.

---

ஒரு குழுவில் 3 முதல் 5 மாணவர்கள் வரை இருக்கலாம்.

---

உடன் ஒரு வழிகாட்டி ஆசிரியரும் இருக்கலாம்.

---

எத்தனை குழுக்கள் பங்கேற்கின்றன என்பதை ஆன்லைனில் முன்னரே பதிவு செய்ய வேண்டும் – https://futurescientist.kslmedia.in/

2019

**KSL Media Limited**
CIN : U22222TN2013PLC092078

இந்து தமிழ் திசை

நாள்: 28-08-2019

6530


**பெறுநர்;**

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள்
முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

**மதிப்புக்குரிய முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு**

வணக்கம். பாரம்பரியமிக்க 'The Hindu' குழுமத்திலிருந்து வெளிவரும் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் கடந்த ஐந்தாண்டு காலமாக ஊடகத் துறையில் சிறப்பான தனது பங்களிப்பை நல்கி வருவதை தாங்கள் அறிவீர்கள். நாளிதழ் வழியாக மட்டுமின்றி கள அளவிலும் மாணவர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்டோரின் மேம்பாட்டுக்கான பல நிகழ்வுகளை 'இந்து தமிழ் திசை' நாளிதழ் முன்னின்று நடத்தி வருகிறது.

அந்த வகையில் புகழ்பெற்ற வேலூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (VIT) உடன் இணைந்து 'இந்து தமிழ் திசை' நாளிதழும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் வழங்கும் 'நாளைய விஞ்ஞானி' எனும் அறிவியல் நிகழ்வு நடைபெற உள்ளது.




புதுமைகள் பல படைக்கும் இளம் மாணவர் அறிவியல் அறிஞர்களை ஊக்கப்படுத்தும் அறிவியல் திருவிழாவாக இந்த நிகழ்வு நடைபெற உள்ளது.

மாணவர்கள் தாங்கள் வாழும் பகுதியில் நிலவும் ஏதேனும் ஒரு பிரச்சினையை அடையாளம் கண்டு, அதற்கான காரணங்களை அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய வேண்டும். அறிவியல் வழிமுறைகளைப் பயன்படுத்தி, அந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். கூர்ந்து நோக்குதல், மக்களிடம் கருத்து கேட்டு, தகவல்களை திரட்டுதல், பரிசோதனைகளை நிகழ்த்திப் பார்த்தல் போன்ற பல அறிவியல் வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

(A scientific project is a study of a problem carried out with a objective of finding out a solution to the problem. It involves defining the problem, making the hypothesis, observation, collection of data through survey or experimentation, its analysis and then arriving at conclusion to find out the solution.)

இவ்வாறு மக்களுக்கு பயன்படும் வகையில் மாணவர்கள் கண்டறிந்த புதுமைகளை ஆய்வு அறிக்கையாக தயாரிக்க வேண்டும். ஆய்வின் தலைப்பு, ஆய்வுத் திட்டத்தின் நோக்கம், பிரச்சினைகளைக் கண்டறிய பயன்படுத்திய அறிவியல் வழிமுறை, பிரச்சினைகளின் பட்டியல், காரணங்கள், தீர்வுகள், தீர்வுகளை அமல்படுத்திய விதம் போன்ற விவரங்களை A4 அளவு பேப்பரில் டைப் செய்ய வேண்டும். தங்கள் ஆய்வை விவரிக்க புகைப்படங்கள் (Images), வரைபடங்கள் (Graphs) போன்றவற்றை இணைக்கலாம். அறிக்கையை தொகுத்து, பைண்டிங் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

(Use A-4 size paper (8" x 11.5") for writing the report.

Students may use Tamil or English language to write the report.

Write on one side of the paper.

The report should be either neatly typed or handwritten.

Sketches, photographs may be used.)

Registered Office:
Kasturi Building, 859 & 860,
Anna Salai, Chennai - 600 002,
Tamilnadu, India.
Telephone: +91 44 2857 6300, 3347 6300

Corporate Office:
Kasturi Centre, 124, Wallajah Road,
Chennai 600 002, India.
Telephone: +91 44 3089 9000
Fax: 91-44-2855 2215

மேலும், அறிவியல் திருவிழாவில் இந்த ஆய்வில் தங்களுக்கு கிடைத்த அனுபவங்கள் குறித்து மாணவர்கள் சுமார் 8 நிமிடங்கள் உரை நிகழ்த்த வேண்டும். அப்போது நடுவர்கள் மற்றும் பார்வையாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அவ்வாறு உரை நிகழ்த்தும்போது, தாங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிரச்சினையில் மக்களுக்கு உதவும் வகையில், மாணவர்கள் தாங்கள் வடிவமைத்த கருவிகளை காட்சிப்படுத்தலாம்.

(Each child would be given some specific time of 8 mins to present the report and 2 mins for interaction with evaluators and other participants.

Working models/charts/transparencies can be used for presentation.

The group leader shall present the report. Other students may help the leader and shall answer to the questions.

Summary of the report in around 500 words)

இந்த நிகழ்வின் இளநிலை பிரிவில் 9,10-ம் வகுப்பு மாணவர்களும், முதுநிலை பிரிவில் 11, 12-ம் வகுப்பு மாணவர்களும் பங்கேற்கலாம். தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்கு தனித்தனி அமர்வில் ஆய்வு சமர்ப்பித்தல் நிகழ்வுகள் நடைபெறும்.

ஒரு குழுவில் 3 முதல் 5 மாணவர்களும், அவர்களுக்கு வழிகாட்ட ஒரு ஆசிரியரும் இருக்கலாம்.

இந்த அறிவியல் திருவிழாவில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள், செப்டம்பர் 10-ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு பதிவு செய்யும்போது அறிவியல் ஆய்வுத் திட்டத்தின் தலைப்பு, தாங்கள் மேற்கொள்ளவுள்ள ஆய்வுப் பணி பற்றிய சுருக்கமான அறிமுகம் போன்ற விவரங்களை (அதிகபட்சம் 100 வார்த்தைகள்) தெரிவிக்க வேண்டும்.

செப்டம்பர் இறுதி வாரத்தில் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் மண்டல அளவிலான அறிவியல் திருவிழா நடைபெறும். அதில் தேர்வு செய்யப்படும் மாணவர்களைக் கொண்டு அக்டோபர் முதல் வாரத்தில் வேலூர் விஐடி வளாகத்தில் மாநில அளவிலான அறிவியல் திருவிழா நடைபெறும். அங்கு இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்ட விஞ்ஞானிகளுடன் மாணவர்கள் நேரிடையாக உரையாடலாம்.

மாணவர்கள் கீழ்கண்ட ஆன்லைன் முகவரியில் mp4/ images/ documents/ PPT போன்ற ஏதேனும் ஒரு வடிவில் தங்களைப் பற்றிய விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மாணவர்களிடையே ஆய்வுக் கண்ணோட்டத்தை வளர்க்கவும், அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தவும் நடத்தப்படும் இந்த அறிவியல் திருவிழாவில் பெருமளவில் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு தக்க வழிகாட்டுதல் வழங்க முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் ஆவன செய்யும்படி வேண்டுகிறோம்.

**பதிவு செய்ய வேண்டிய ஆன்லைன் முகவரி: https://futurescientist.kslmedia.in/**

'இந்து தமிழ் திசை' நாளிதழின் மிக முக்கியமான நிகழ்வு ஒன்றில் தங்களோடு கரம் கோர்த்து செயல்படுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

நன்றி.

இப்படிக்கு

**(கே.அசோகன்)**

ஆசிரியர்

இந்து தமிழ் திசை நாளிதழ்